**செய்தி வெளியீடு எண்: 666** **நாள்: 15.09.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் 14.9.2018 அன்று தலைமைச் செயலகத்தில், எரிசக்தித் துறையின் சார்பில் சென்னை, போரூரில் 245 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 230/110–33 கி.வோ. மற்றும் 110/11 கி.வோ. (வளிமகாப்பு) துணை மின் நிலையத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், தமிழ்நாட்டின் 14 மாவட்டங்களில் 250 கோடியே 62 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 16 துணை மின் நிலையங்களையும் திறந்து வைத்தார்கள்.

மின்பாதையில் ஏற்படுகின்ற மின் இழப்பையும், மின்பராமரிப்பு செலவினங்களையும் குறைத்து, ஒவ்வொரு பகுதிக்கும் தேவைப்படுகின்ற உச்சகட்ட மின் தேவையை நிறைவு செய்யும் வகையில் சரியான மின் அழுத்தத்துடன், மக்களுக்கு சீரான மின்சாரம் வழங்கிட கூடுதல் துணை மின் நிலையங்கள் அமைப்பது அவசியமாகும் என்பதைக் கருத்தில் கொண்டு, தேவைக்கேற்ப புதிய மற்றும் தரம் உயர்த்தப்பட்ட துணை மின் நிலையங்களை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் செயல்படும் தமிழ்நாடு அரசு அமைத்து வருகிறது.

அந்த வகையில், சென்னை – போரூரில் 245 கோடியே 25 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 230/110–33 கி.வோ. மற்றும் 110/11 கி.வோ. (வளிமகாப்பு) துணை மின் நிலையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாகத் திறந்து வைத்தார்கள்.

மேலும், சென்னை – சென்ட்ரல் 230/110 கி.வோ. (வளிமகாப்பு) துணை மின் நிலையம், விருதுநகர் மாவட்டம் – மல்லாங்கிணர் 110/33/11 கி.வோ. துணை மின் நிலையம், மதுரை மாவட்டம் – ஏழுமலை 110/33 கி.வோ. துணை மின் நிலையம் (விகிதாச்சார அறிமுகம்), தருமபுரி மாவட்டம் – மாம்பட்டி 110/33 கி.வோ. துணை மின் நிலையம் மற்றும் சோலைக்கொட்டாய் – 33/11 கி.வோ. துணை மின் நிலையம், ஈரோடு மாவட்டம் – சிவகிரி 110/33 கி.வோ. துணை மின் நிலையம் (விகிதாச்சார அறிமுகம்), கரூர் மாவட்டம் – ரெங்கநாதபுரம் 33/11 கி.வோ. துணை மின் நிலையம், திருவண்ணாமலை மாவட்டம் –

அரையாளம் 33/11 கி.வோ. துணை மின் நிலையம், விழுப்புரம் மாவட்டம் – ரெட்டணை 33/11 கி.வோ. துணை மின் நிலையம், கடலூர் மாவட்டம் – சிறுபாக்கம் 33/11 கி.வோ. துணை மின் நிலையம், வேலூர் மாவட்டம் – கரிவேடு 33/11 கி.வோ.துணை மின் நிலையம், திருநெல்வேலி மாவட்டம் – ரஸ்தா 33/11 கி.வோ. துணை மின் நிலையம், தஞ்சாவூர் மாவட்டம் – E.B.காலனி 33/11 கி.வோ. துணை மின் நிலையம், புதுக்கோட்டை மாவட்டம் – பழைய கந்தர்வகோட்டை 33/11 கி.வோ. துணை மின் நிலையம் மற்றும் வல்லவாரி 33/11 கி.வோ. துணை மின் நிலையம், நாகப்பட்டினம் மாவட்டம் – வேளாங்கண்ணி 33/11 கி.வோ. துணை மின் நிலையம்;

என மொத்தம் 495 கோடியே 87 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள 17 துணை மின் நிலையங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி.ஜெயகுமார், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.பி. தங்கமணி, மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு.பா. பென்ஜமின், மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாடுத் துறை அமைச்சர் திரு.க. பாண்டியராஜன், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., எரிசக்தித் துறை முதன்மைச் செயலாளர் திரு.முகமது நசிமுத்தின், இ.ஆ.ப, தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.விக்ரம் கபூர், இ.ஆ.ப, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 15.9.2018**